1974 சனவரி 23]

பத்தாயிரம் டன்னில் 9 ஆயிரம் டன்களில் இவற்றைக் கொடுக்கிறோம். எது வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம் என்ற முறையிலேதான் அப்படிக் கொடுக்கப்படுகிறது. நமக்கு நிறைவாகக் கொடுத்தால்தான் எல்லோருக்கும் கொடுக்க முடியும், இல்லாவிட்டால் கொடுக்க முடியாது என்ற நிலைமைதான் இருக்கிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : சார், கோதுமையைக் கொடுக்கின்ற போது ஆட்டாவாகவும் ஆக்கிக் கொடுக்கிறார்கள். கோதுமையை அரைத்து ரவையை அப்புறப்படுத்தி, மைதாவை அப்புறப்படுத்தி அதனுடைய 'ரெம்னன்ட்ஸ்' என்று சொல்லக்கூடிய அளவிற்குத்தான் அவை தவிடாகவும் உமியாகவும் இருக்கிறது. மக்கள் சாப்பிடக்கூடிய அளவிற்கு இருந்தால்தான் ஆட்டா கொடுக்கவேண்டும், இல்லாவிட்டால் கோதுமையையே கொடுக்கவேண்டுமென்ற முறையிலே ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : மைதா, ஆட்டா போதிய அளவு இல்லாத காரணத்தினாலேதான் 60 சதவிகிதத்தை மைதாவும், 40 சதவிகிதத்தை ஆட்டாவும் ஆக அவர்கள் விரும்பினால் வாங்கிக்கொள்ளலாம் என்று வைத்திருக்கிறோம். விரும்பினால்தான் வாங்கிக் கொள்ளலாம், இல்லாவிட்டால் வாங்கிக்கொள்ள வேண்டிய கட்டாயம் இல்லை. முன்னாலே கொடுத்ததிலே 60 சதவிகிதம்தான் கொடுக்க முடியும் என்ற நிலைமைதான் இருக்கிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் லெவி சர்க்கரை வியாபாரிகள்

* **114 வினா—திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் நியாய விலை சர்க்கரை விநியோகம் செய்ய நியமிக்கப்பட்டுள்ள சிறு வியாபாரிகள் எத்தனை பேர் ?

(இ) அவர்களில் தனி நபர் எத்தனை பேர், கூட்டுறவு சங்கங்கள் எத்தனை ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) 893.

(இ) 23—11—1973 நிலவரப்படி,

தனி நபர்கள்	384
கூட்டுறவு பண்டகசாலைகள்	505
அரசு மாதிரிக் கடைகள்	4

[1974 சனவரி 23

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இந்த நியாய விலை சர்க்கரை விநியோகிப்பதிலே தனியாரைவிட கூட்டுறவு முறையில் ஓரளவு தாராளமாகக் கிடைக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் கோயில்பட்டியில் தனியாரிடமிருந்து கூட்டுற வுக்கு மாற்றிய பிறகு ஒவ்வொரு மாதமும் இருபது இருபது மூட்டைகள் ஒவ்வொரு கடையிலேயும் ஸ்டாக் வைக்கும் நிலைமை இருக்கிறது. 384 பேர் தனியார் என்றார்கள். அவர்களையும் மாற்றி எல்லா வினியோகத்தையும் கூட்டுறவுச் சங்க முறையிலே விநியோகிக்க கட்டாயமாக உத்தரவு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, சர்க்கார் உத்தரவு போட்ட பிறகு இந்த நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கின்றன. கோயில்பட்டியிலே 74 கடைகள் ஹைகோர்ட் டுக்குப் போய் ரிட் வாங்கியிருக்கிறார்கள். நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டே இருக்கிறோம். எவ்வளவு வேகமாகச் செய்ய முடியுமோ அவ்வளவு வேகமாக கூட்டுறவுத் துறையிலே செய் கிறோம். ஆகவே, கூட்டுறவுத் துறையிலே அதை விநியோகிக்கும் முறையிலே நன்றாக இருக்கிறது என்று சொன்னதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எ. சுவாமிதாஸ்: தலைவரவர்களே, தமிழ்நாட்டிலே உள்ள அனைவரும் இப்பொழுது கோதுமையை அதிகமாக விரும்பி சாப்பிடுவதால் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கோதுமையைப் பற்றி அல்ல, சர்க்கரையைப் பற்றியது.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, இந்த சர்க் கரையை விநியோகிக்கும் முறையிலே குறிப்பிட்ட ஒரு நாளிலே, இரண்டு நாட்களிலே விநியோகிப்பது என்று முடிவு செய்து விநி யோகிக்கிறார்கள். அந்த இரண்டு நாட்களுக்குள்ளே ஜனங்கள் வந்து வாங்கிக்கொண்டால் வாங்கிக்கொள்ள வேண்டியது, இல்லை யென்றால் மீதியுள்ள சர்க்கரையை ப்ளாக் மார்க்கெட்டிலே விற்கி றார்கள். இது சம்பந்தமாக அரசாங்கத்திற்கு பல ரிப்போர்ட்டுகள் வந்திருக்கின்றன. அவைகளின்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? சர்க்கரை விநியோகத்தில் அது முழு வதும் தீரும் வரையில் மாதம் முழுவதும் தொடர்ந்து கொடுப்ப தற்கு அரசாங்கம் முன்வருமா?

1974 சனவரி 23]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, இப்படி எதுவும் கவனத்திற்கு வந்திருந்தால் உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்கிறோம். மாதம் பூராவும் மக்கள் நல்ல முறையிலே உபயோகிக்க வேண்டுமென்ற முறையிலே அதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். புதிதாக சில சொசைட்டிகளை ஏற்பாடு செய்வதால் கொஞ்சம் காலதாமதம் இருக்கிறது. அது விரைவாக நிவர்த்தியாக இருக்கிறது கூட்டுறவுத் துறையிலே செயல்படுவதால்.

வீட்டுவசதி சிறப்புத் திட்டம்

***115 வினா—திரு. கே. என். குமாரசாமி:** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

அ) மத்திய அரசிடமிருந்து தமிழ்நாட்டில் ஒரு லட்சம் வீடு கட்டுகின்ற திட்டத்தை அமுல்படுத்த, தமிழ்நாடு அரசுக்கு ஏதாவது உத்திரவு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடம் இல்லை.

திரு. கே. என். குராமசாமி: தலைவரவர்களே, இந்தத் திட்டம் கேரள மாநிலத்திலே செயல்பட்டு மத்திய சர்க்காரின் மூலம் ஒரு இலட்சம் வீடுகள் கட்ட திறப்பு விழா நடத்தப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. அதேபோல் திட்டத்தை நம்முடைய மாநிலத்திற்குக் கொடுத்திருக்கிறார்களா? இல்லையென்றால் அந்தத் திட்டத்தின் பெயரால் கொடுக்காமல் இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, கேரள மாநிலத்தில் இப்படி ஒரு திட்டத்தை திரு. கோவிந்த நாயர் அவர்கள் தீட்டி நடைமுறைக்குக் கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டத்திலே சில குறைபாடுகள் இருக்கின்றன. அதன் காரணமாக இப்பொழுது அதை நடைமுறைக்குக் கொண்டு வருவதா இல்லையா என்ற ஆராய்ச்சியில் இருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.